THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : (a) There was no selection of Municipal Commissioners in 1957–58.

(b) Does not arise.

SRI M. JAGANNATHAN : In view of the fact that there is very poor representation of Harijans in the service of Municipal Commissioners in our State, will the Government consider the desirability of appointing more number of Harijans in this service?

THE HON. SRIMATHI LOURDHAMMAL SIMON : At the time of the selection of Commissioners, we can consider that point. But, at present, there is no selection.

Valparai shooting

* 211 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state whether any action has been taken against the Police Sub-Inspector, who was responsible for shooting the plantation workers, Valparai, in January 1957?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The entire matter is under examination.

SRI N. K. PALANISWAMI : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் அன்றைய தினம் சட்டசபையில் சொல்லும்போது இதைப்பற்றி விசாரணை செய்யும்படி ஐ.ஜி.-க்குச் சொல்லியிருக்கிறோம் என்று சொல்லி ஒரு வருஷத்திற்கு மேலாகியும் இதுவரையிலும் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதன் காரணம் என்ன ? இம்மாதிரிப்பட்ட சப்-இன்ஸ்பெக்டர்களை வைத்திருக்கவேண்டும் என்று இந்தச் சர்க்கார் நினைக்கிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : சப்-இன்ஸ்பெக்டர் தகுந்த காரணத்தோடுதான் சுட்டார் என்று விசாரணை செய்து கமிஷன் தெரிவித்திருக்கிறது. ஆனால் ஸப்-இன்ஸ்பெக்டர் அரஸ்டு செய்ததைப்பற்றிதான் இப்போது பிரச்னை. அதைப்பற்றி விசாரணை செய்து இன்னும் முடிவு வரவில்லை. இதற்கு முன்பாக அப்பீல் இருந்தது. அப்பீல் முடிந்த பிறகு அதன் மீது ஐ.ஜி.யினுடைய ரிமார்க் அரசாங்கத்திற்கு வந்துவிட்டது. அது இப்போது சர்க்காரின் பரிசீலனையில் இருக்கிறது.

SRI M. KALYANASUNDARAM : அப்பீலில் குற்றம் சாட்டப்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சங்க பிரதிநிதிகள் இவர்கள் எல்லாம் விடுதலை அடைந்துள்ளனர். அதோடு போலீஸார் சாதுரியமாக நடந்திருந்தால் இதைத் தவிர்த்திருக்கலாம் என்று அப்பீல் முடிவில் குறிப்பிட்டிருப்பது அரசாங்கத்துக்குத் தெரியுமா ? இதில் இறந்துபோனவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுப்பதற்குச் சர்க்கார் நடவடிக்கை எடுக்குமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹைகோர்டு தீர்ப்புக்கும் இறந்தவர்களுக்கும் நஷ்ட ஈடு கொடுப்பதற்கும் சம்பந்தமில்லை என்று நினைக்கிறேன். இறந்தவர்களுடைய குடும்பத்திற்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டும் என்பதைப்பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் அதைப்பற்றி வேண்டிய நடவடிக்கை எடுத்து அதைப்பற்றி விவரங்களையும் சொல்ல முடியும்.